**SRI SELVA VINAYAKAR KOYIL (GANESHA TEMPLE)**
**BRISBANE (South MacLean)**



# Temple Worship 4

## Sri Santhan Kurukkal - Sri Selva Vinayakar Temple

**<u>மஹாளய பக்ஷம்</u>**




மஹாளய பக்ஷ ஆரம்பம் (06-09-2017) புதன்கிழமை முதல் 16 தினங்கள் பித்ருக்கள் வழிபாடு செய்து நற்கதி அடைவோம்

"மஹாளயம்' என்று சொல்லப்படும் மாளயபக்ஷ நாட்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் அளித்தல் வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது, பௌர்ணமிக்கு அடுத்தநாள் முதல் புரட்டாசி அமாவாசை மறுநாள் வரை நம் முன்னோர்களை நினைவுகூர்ந்து வழிபாடு செய்வதற்காக வகுக்கப்பட்ட விரத காலமாகும்.

நாம் அறிந்தோ, அறியாமலோ அவர்கள் மனம் புண்படும்படி நடந்திருந்தால், அதற்காக வருந்தி மானசீகமாக அவர்களிடம் மன்னிப்பு கேட்கும் காலகட்டம் என்று வேதநூல்கள் கூறுகின்றன. புனித நீர்நிலைகளில் பிதுர்பூஜை செய்வது போற்றப்படுகிறது.

மஹாளய பக்ஷமான பதினாறு நாட்களில், அவரவர் மூதாதையர் மறைந்த திதியில் நீத்தார் வழிபாட்டினை நிறைவேற்றுவது வழக்கம். ஆனால் திதியை மறந்தவர்கள் புரட்டாசி அமாவாசையன்று பிதுர்பூஜை மேற்கொள்வது அவசியமாகும்.

மாளயபட்ச துவக்கத்தில் பூமிக்கு வந்து தங்கும் பித்ருக்கள், மகாளயபட்ச முடிவில் அமாவாசையன்று தில (எள்) தர்ப்பணம் பெற்றுக்கொண்டு, மீண்டும் மேலுலகத்திற்குச் செல்வதாக ஐதீகம். அவர்கள் மறுஜென்மம் எடுத்திருந்தாலும், வாரிசுதாரர் செய்யும் பிதுர்பூஜையால் அவர்களுக்கு பசித்த வேளையில் உணவு கிட்டுமென்பது விதியாகும்.

சந்திரன் ஒளியிழக்கும் அமாவாசையில் மூதாதையர் சம்பந்தப்பட்ட வழிபாடுகள் செய்வது மரபு.

அமாவாசை மந்திர ஜெபத்துக்கு மகத்துவம் அதிகம். இந்த அமாவாசை தினத்தில் ஒருவிதமான புவிஈர்ப்பு விசை உண்டாவதாக அறிவியல் கூறுகிறது. அந்த சக்திமிக்க

அமாவாசை நாளில் முன்னோர்களுக்கான வழிபாட்டினை மேற்கொள்ளும்போது, வேதவிற்பன்னர் ஒரு மந்திரம் சொல்வார். அது...

"ஏஷா நமாதா, நபிதா, நப்ராதா நபந்து
நாந்ய கோத்ரிணஹ
தே ஸர்வே திருப்தி மாயாந்தும் மயோத்
ஸ்ருஷ்டைஹி குசோதனஹ.'

அதாவது, "என் தாயார், என் தந்தை, என் சகோதரர், என் உறவினர் என்ற எந்த வகையான உறவுக்கும் உட்படாத- என் கோத்திரப் பிரிவுக்குள்ளும் வராத- எனக்குத் தெரியாத எத்தனையோ ஆத்மாக்கள் இந்தப் பூவுலகத்திலிருந்து போயிருக்கின்றன. எந்த விதிக்கணக்கிலோ, இயற்கையாகவோ, வியாதியாலோ, விபத்தினாலோ இந்த உலகைவிட்டுப் பிரிந்திருக்கக்கூடிய ஆத்மாக்கள் எல்லாம் நற்கதியடைய நான் பிரார்த்திக்கிறேன். மேலுலகில் எந்தவித துன்பங்களும் அனுபவிக்காமல், மீண்டும் புது உடலோடு எடுக்கும் அடுத்த பிறவியில் எல்லா நன்மைகளும் பெற நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன். எள்ளும் தண்ணீரும் கொண்டு நான் செய்யும் இந்த தர்ப்பணத்தால் அந்த எல்லா ஆத்மாக்களும் திருப்தி அடையட்டும்' என்பதுதான் அந்த சுலோகத்தின் பொருள்.

நம் முன்னோர்கள் மற்றும் நமக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், நண்பர்கள், நம்முடன் வாழ்ந்து அமரர் ஆனவர்கள் அனைவருக்கும் இம்மந்திர வழிபாட்டினால் நற்கதி கிட்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக அனைத்து அமாவாசை திதிகளிலும், அக்னி பகவானின் பத்தினியான ஸ்வாதா தேவியானவள், தர்ப்பணம் தருபவர் அளிக்கும் எள்ளையும் நீரையும் வாங்கி வானத்தில் எங்கோ உள்ள நீத்தார் உலகத்திற்கு எடுத்துச் செல்கிறாள். ஆனால், இந்த மகாளய பக்ஷ (ஆவணி/ புரட்டாசி) பவுர்ணமி அடுத்த பிரதமை முதல் (புரட்டாசி) அமாவாசை மறுநாள் பிரதமை வரை எல்லா முன்னோர்களும் சூரிய சந்திர உலகிற்கு வந்துபோவதால், ஸ்வாதா தேவியால் அனைத்து முன்னோர்களையும் அங்கேயே சந்திக்கும் வாய்ப்புள்ளது. மஹாளயபக்ஷ அமாவாசையில் நாம் புனித நீர்நிலையில் பிதுர்பூஜை மேற்கொள்ளும்போது, வேதவிற்பன்னர் மந்திரம் கூற நாம் அளிக்கும் நீர், எள் இவற்றை முன்னோர்களிடம் எளிதில் சேர்ப்பித்துவிடுகிறாள் ஸ்வாதாதேவி.

தவிர்க்கமுடியாத காரணத்தால் இந்தப் பதினைந்து நாட்களும் அமாவாசையன்றும் தர்ப்பணம் செய்யமுடியாதவர்கள், மஹா பரணி, மத்யாஷ்டமி, திரயோதசி, அமாவாசை, தாய் தந்தையர் திதி அன்று மட்டுமாவது செய்யுங்கள். இதிலும் தவறியவர்கள் அடுத்தபட்சத்திலும் வழிபாட்டினை மேற்கொள்ளலாம். ஏனெனில் தீபாவளி அமாவாசை வரை முன்னோர்கள் பூலோகத்தில் இருப்பார்கள். அதனால்தான் தீபாவளிப் பண்டிகையன்று அமரரான நம் பெற்றோர்கள், முன்னோர்களை நினைவுகூர்ந்து படையல் சமர்ப்பித்து வழிபடுகிறோம். தீபாவளித் திருநாளே முன்னோர்களுக்கான பூஜைக்குரிய நாள் என்று சாஸ்திரம் கூறுகிறது.

தர்ப்பணம் அளிக்கும்போது எள்ளும் தர்ப்பையும் அவசியம் பயன்படுத்தப்படுகிறது. எள் திருமாலின் வியர்வைத் துளியிலிருந்து உருவான பரிசுத்தமான தானியமாகும். தானம் செய்யும்போது எள் தானம் செய்தால், அதன் பலன் மிகவும் சிறப்பானது. எத்தகைய பாவமும் இதனால் நீங்கும்.

பிதுர்பூஜையின்போது எள்ளைப் பயன்படுத்துவதால் நம் பிதுர் தேவர்கள் மகிழ்ச்சியடைந்து வாழ்த்துகிறார்களாம்.

தர்ப்பைப்புல் என்பது முதலில் ஆகாயத்தில் தோன்றியது. இதில் ஒரு முனையில் பிரம்மனும், மறுமுனையில் சிவனும், நடுப்பகுதியில் திருமாலும் வாசம் செய்வதாக ஐதீகம்.

இந்த மஹாளய பக்ஷ புண்ணிய காலத்தில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய, சிரார்த்தம் செய்ய ரிஷிகள், முனிவர்கள், தேவர்கள், மகான்கள் என அனைவரும் பூலோகத்திற்கு வருகிறார்கள்.

நாமும் மஹாளய பக்ஷம் 16 தினங்கள் தினமும் பித்ருக்கள், காருண்யா பித்ருக்களுக்கும் ( நமது மூதாதையர்கள்,மற்றும் நமக்குத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், குரு, ஆசிரியர், நண்பர்கள், நம்முடன் வாழ்ந்து அமரர் ஆனவர்கள் அனைவருக்கும் ) சிரார்த்தம் / தர்ப்பணம் செய்து , நமது சாப, பாவங்களை நீக்கி அவர்களின் ஆசீர்வாததை பெறலாம்.

பித்ருக்களின் உலகிற்குத் தலைவனான எமதர்மனின் சம்யமினீ என்ற அரசாங்கம் தெற்கில் உள்ளதால் பித்ரு பூஜை தென்முகமாகச் செய்யப்படுகிறது.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!



பிரம்மஸ்ரீ சந்திர சாந்தரூப சிவாச்சாரியார்

(Chief Priest – Sri Selva Vinayakar Temple)


**Visit Brisbane Sri Selva Vinayakar (Ganesha) Temple and get the Blessing of Lord Ganesha**







**Temple Website: http://www.sriselvavinayakar.org Follow us on (click the icons):**
**4915-4923, Mt Lindesay Highway, South Maclean, Queensland-4280, Australia, Phone: +61 7 5547 7302**